Registered as a News Paper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 பங்குனி 04 வியாழக்கிழமை (18-03-1999) UTHAYAN Lively National Tamil Daily கதிர் 95

# தள்ளாடி படை முகாம் மீது புலிகள் பெரும் தாக்குதல்!

## ஒரு பகுதி பெருஞ் சுவாலைவிட்டு எரிந்து கொண்டிருப்பதாகத் தகவல்

கொழும்பு, மார்ச் 18

மன்னாரில் பிரதான இராணுவத்தளமான தள்ளாடி இராணுவ முகாம் மீது நேற்றுமாலை 6.00 மணிமுதல் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்று பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முகாம் பகுதி புகைமண்டலமாகக் காட்சியளிப்பதாகவும், பாரிய வெடிச்சத்தங்கள் கேட்டவண்ணம் இருப்பதாகவும் நேற்றிரவு தெரிவிக்கப் பட்டது.

ஆட்லரி மூலம் புலிகள் தமது தாக்குதலை ஆரம்பித்தனர் என்றும்—

அதைத்தொடர்ந்து முகாம் பகுதியில் வெடிச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருப்பதாகவும்—

புகைமண்டலமாக முகாம் பகுதி காட்சியளிப்பதாகவும் — அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

அந்தப் பகுதியில் மூன்று வகையான சத்தங்கள் கேட்பதால் மூன்று விதமான ஆட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திட்டமிட்டபடி பயணிகள் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 18

நாளை மறுதினம் சனிக்கிழமை 'லங்காமுடித்த' கப்பல் மூலம் காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு ஆயிரம் பயணிகளை அழைத்துச் செல்ல

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் இடம்பெயர்ந்து ஆலயங்களில் தஞ்சம்

மன்னார், மார்ச் 18

மன்னார் தள்ளாடி முகாம் மீதான தாக்குதலை அடுத்து நேற்றிரவு மன்னார் பெரியகடைப் பகுதியில் — பழைய ரெலிக்கொம் ரவருக்கு அருகில் — ஷெல் வந்து வீழ்ந்ததால் அப்பகுதியைச் சேர்ந்த 200 பொதுமக்கள் இடம் பெயர்ந்து ஆலயங்களில் தங்கியுள்ளனர் என்று தெரிய வந்தது.

பெரிய கடைப் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் சேதம் எதுவும் ஏற்படாதபோதும் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவுகின்றது.

இருளில் மூழ்கியுள்ள மன்னார் நகரில் மக்கள் பாதுகாப்பு இடங்களை நாடியுள்ளனர். (இ-3)

## 2 பொலீஸார், 4 ஊர்காவலர்கள் கண்ணிவெடித் தாக்குதலில் பலி!

### டிராக்டரில் சென்ற சமயம் சம்பவம்

கொழும்பு, மார்ச் 18

வவுனியாவில் இருந்து மாமடுவுக்கு டிராக்டரில் சென்று கொண்டிருந்த படையினர் மீது நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் கண்ணி வெடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் இரண்டு பொலீஸாரும், நான்கு ஊர்காவலரும் உயிரிழந்தனர்; ஒரு பொலீஸாரும் 3 ஊர்காவலரும் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

காயமடைந்த ஊர்காவலர்கள் அபாயகரமான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக வவுனியா பொலீஸ் அத்தியட்சகர் ராஜா வீரக்கோன் விசாரணை மேற்கொண்டுள்ளார்.

(இ-3-6-க)

## பாதுகாப்பு அரணுக்குள் நேற்றுக் குண்டுவெடித்தது

### மூலவைச்சந்தியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி மூலவைச்சந்தி பாதுகாப்பு அரணுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு நேற்றுக் காலை வெடித்தது.

நேற்றுக் காலை 8-40 மணியளவில் இந்தப் பாதுகாப்பு அரணுக்குள் இராணுவச் சிப்பாய் ஒருவர் நுழைந்தபோது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கல்கிசையில் குண்டுத் தாக்குதல் நடத்தியவர் மன்னாரை சேர்ந்தவராம்

### வத்தளையில் 2 பெண்கள் உட்பட மூவர் கைது

கொழும்பு, மார்ச் 18

கல்கிசையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த குண்டுதாரி மன்னாரைச் சேர்ந்த ருயீன் மேரி என இனங்காணப்பட்டுள்ளார் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

வத்தளையில் உள்ள வீடு ஒன்றைச் சோதனையிட்ட பொலீஸார் அங்கிருந்து இரு பெண்களையும், தமிழர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

இந்த மூவரும் விசாரிக்கப் பட்டதில் குண்டுதாரியான பெண் புறக்கோட்டையில் நிரந்தரமாக வசித்து வந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

பின்னர் அவர் புறக்கோட்டையில் தங்கியிருந்த வீட்டைப் பொலீஸார் சோதனை செய்த சமயம் அங்கிருந்து இருவரைக் கைதுசெய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலின்போது சயனைட் உட்கொண்டு உயிரிழந்தவர் மட்டக்களப்பைச் சேர்ந்த ஜீவேந்திரா என இனங்காணப்பட்டுள்ளார் எனப் பொலீஸார் தெரிவித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் இருந்து

## படகு மூலம் திரும்பிய 9 ஈழ அகதிகள் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 18

தமிழகத்தில் இருந்து மன்னாருக்கு கடந்த 7 ஆம் திகதி படகுமூலம் திரும்பிக்கொண்டிருந்த ஒன்பது ஈழ அகதிகளும் இரு இந்திய படகோட்டிகளும் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர் என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலக அதிகாரி செல்வி கௌரி சுந்தரலிங்கம் நேற்று காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு சென்ற சமயம் இந்தத்தகவல் அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் கைகலப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களின் கலை வாரத்தை ஒட்டி நேற்றுப் பிற்பகல் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற நாடகப் போட்டிகளின்போது இரு அணி மாணவர்களிடையே கைகலப்பு இடம்பெற்றது.

காயத்துக்குள்ளான மூன்று மாணவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர் அணிகளுக்கு இடையில் நிலவி வந்த முரண்பாடு கைகலப்பாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## களனி ரயில் பாதையில் நேற்றுக் குண்டு மீட்பு!

கொழும்பு, மார்ச் 18

கொழும்பு பிரதான ரயில் பாதையில களனி ரயில் நிலையத்துக்கும் பாலத்துக்கும் இடையில் புதைக்கப்பட்டிருந்த நேரம் கணித்து வெடிக்கும் குண்டு ஒன்றைப் பொலீஸார் கைப்பற்றினர்.

நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இரு சிறுவர்கள் கொடுத்த தகவலையடுத்து மூந்நூறு கிராம் எடையுள்ள இந்தக் குண்டு கைப்பற்றப்பட்டு பின்னர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நூற்றுக்கணக்கானோர் விசாரிக்கப்பட்டனர்

கொழும்பு, மார்ச் 18

கல்கிசையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து பொலீஸாரும், படையினரும் கூட்டாக மேற்கொண்ட தேடுதல்களில் நூற்றுக் கணக்கானவர்கள் விசாரிக்கப்பட்டனர் என்று பொலீஸார்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தனில் மோதல்

கொழும்பு, மார்ச் 18

பரந்தன் பகுதியில் நேற்று முன்தினம் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு படையினர் பரந்தனுக்கு கிழக்கு, மேற்கு பகுதிகளால் முன்னேறிய சமயம் படையினருக்கும், புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம் பெற்றது.

இந்த மோதல் பல மணி நேரம் இடம்பெற்றதாகவும்—

இரு தரப்பும் ஆட்லறி, மோட்டார் மற்றும் சிறு ஆயுதங்கள் கொண்டு மோதியதாகவும்—படைத் தரப்பு தெரிவித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழை தரைமண் கலட்டி

## ஸ்ரீசித்திவிநாயகர் கோயில்

அந்தரித பிரதிஷ்டா

## மஹா கும்பாபிஷேகம்

18 - 03 - 99 வியாழக்கிழமை

காலை 7-00 மணிக்கு பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பம்

பகல் 12-00 மணி முதல் 2-00 மணி வரை எண்ணெய்க் காப்பு

பிற்பகல் 2-30 மணிக்கு யாக பூஜை

19 - 03 - 99 வெள்ளிக்கிழமை

காலை 9 -25 மணிக்கு கும்பாபிஷேகம்

தொடர்ந்து தர்சனம், மஹா அபிஷேகம், விஷேட பூஜை, திருவீதியுலா இடம்பெறும்.

(63952) - பரிபாலன சபையினர்



"நியந்த்ரீ"யின் அனுசரணையுடன்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

நடத்தும்

## கருத்தரங்கு

"இன்றைய சமய வாழ்வில் ஆலயங்கள்"

பன்முகக்கண்ணோட்டம்

இடம்:- நல்லூர் சிவன்கோயில்—யாழ்ப்பாணம்

காலம்:- 20—3—99 சனிக்கிழமை

காலை 9. 30 மணி—12. 30 மணி வரை

— கலாசார உத்தியோகத்தர்

பிரதேச செயலகம்,
நல்லூர். (சி/6817)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

மானிப்பாய்

பண்டத்தரிப்பு நவீன சந்தைக் கடைகளை குத்தகையில் நடத்தியவர்களுக்கான

## அறிவித்தல்


பண்டத்தரிப்பு நவீன சந்தை உட்புற, வெளிப்புற கடைகள் புனரமைக்கப்பட்டு குத்தகைக்கு வழங்கப் படவுள்ளன. எனவே இடம்பெயர்வின் முன் கடைகளை நடத்திய குத்தகைக்காரர்கள் தாங்கள்தொடர்ந்தும் கடைகளை நடத்த விரும்பின் 19—04—1999 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன் தங்களின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

குறிக்கப்பட்ட திகதிக்கு பின் வரும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்
தலைவர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை.

[சி/6815]

## 31 ஆம நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 02-04-1913

மறைவு: 17-02-1999

## T. A. பிரான்சிஸ்

(தொ. தங்கப்பிரகாசம்)

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு T A. பிரான்சிஸ் (தொ. தங்கப்பிரகாசம்) அவர்கள் 17-02-99இல் கனடாவில் காலமானார்.

31 ஆம் நாள் நினைவாக அவரின் ஆன்ம சாந்திக்காக ஊர்காவற்றுறை புனித சூசையப்பர் ஆலயத்தில் 19-03-1999 பிறபகல் 5 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இத்திருப்பலியில் பங்கு கொண்டு இவரின் ஆன்ம சாந்திககாகப் பிரார்த்திக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
A. F. J. ஜெரோம்
(மகன்) ஊர்காவற்றுறை.
அருட்செல்வி மேரி கலிஸ்ரா பிரான்சிஸ் (மகள்)
அதிபர் யா/கரம்பொன் சிறியபுஸ்ப மகளிர் ம. வி.

(63953)

## வாராந்த நிகழ்வு

கொழும்புத்துறை, மார்ச் 18

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30மணிக்கு உரையரங்கும், கலை நிகழ்வும் உடுவில் இந்து இளைஞர் மன்ற ஆதரவில் நடைபெறும்-

பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெறும்.

இந்நிகழ்விற்கான அறிமுக உரையை உடுவில் இந்து இளைஞர் மன்றத்தைச் சேர்ந்த எஸ். தியாகச்சந்திரன் நிகழ்த்துவார்.

(ஐ 30-173)

## கிரிக்கெட் போட்டி

யாழ் செயலக நலன்புரிக் கழகத்தினர் மென்பந்து துடுப்பாட்டம், பூப்பந்து ஆகிய சுற்றுப் போட்டிகளை எதிர் வரும் 27 ஆம் திகதி முதல் சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் நடத்தவுள்ளனர்.

இப் போட்டிகளில் யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் வங்கிகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர் அணிகள் பங்கு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-100)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 18

அரியாலை 80 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவினரின் ஆதரவில் அரியாலை மத்தியவிளையாட்டுக் கழகம் நடத்தும் ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர்கள் கிரிக்கெட் போட்டிகள் எதிர் வரும் 28 ஆம் திகதியும், அடுத்தமாதம் 4 ஆம் திகதியும் நடைபெறவிருக்கின்றன.


ராஜா

யாழ்ப்பாணம்.

கார்த்திக் - தேவயானி ரசிகா, அஞ்சுஅரவிந்த் ஜனகராஜ், மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த

உ உதவிக்கு வரலாமா

இன்று காட்சிகள் 10-30, 2-30.

(சி/6663)



நாகம்ஸ்

சுன்னாகம்

விஜய், விஜயகாந்த், யுவராணி, கௌதமி நடித்த

செந்தூரபாண்டி

புதிய நேரப்படி காட்சிகள் 11-00, 2-30

(63925)



லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி

இன்று மட்டும் சத்தியராஜ் - மீனா நடித்த

தாய் மாமன்

19 - 03 - 99 முதல்

கையளவு மனசு

( Part III )

[illegible]

(பழைய நேரம்)

T. P. No. 070-212223

(63680)


# மரண அறிவித்தல்கள்

## ஐயாத்துரை நாகரத்தினம்

(கந்தசாமி ஆசிரியர்)

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், கிராஞ்சியம்பதி கந்தசாமி கோயில் மூத்த அறங்காவலரும், ஓய்வுபெற்ற அதிபருமான ஐயாத்துரை நாகரத்தினம் 12 - 03 - 1999 இல் நீர்கொழும்பிலே காலமாகிவிட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ரதிதேவி, ரவீந்திரன் (ஜேர்மனி), நவீந்திரன் (கனடா), காலஞ்சென்ற புவீந்திரன், சியாமளா தேவி (கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சிவசாமி (நீர்ப்பாசனத் திணைக்களம், கல்முனை), லிங்கேஸ்வரி (ஜேர்மனி), விமலாதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரமிளா (இந்தியா), நிருஷலா, பிரசாத், அறோசன், தனுஷன் (ஜேர்மனி), வித்யாதரன், கவப்பிரியன், விஜிதரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14-03-99 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், அன்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:
அ. சிவராமி
(மருமகன்)
(தொழில்நுட்ப உதவியாளர்,
நீர்ப்பாசனத் திணைக்களம், கல்முனை)

வி. சிவசாமி,
268/1, பலாலி வீதி கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(63956)

## கல்கமுக நமசிவாயகம் அருண்குமார்

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயகம் அருண்குமார் (முன்னாள் ஆசிரியர், சென். தோமஸ் கல்லூரி, கொள்ளுப்பிட்டி, சென். ஜோசப் கல்லூரி, கொழும்பு) நேற்று 17 - 3 - 99 காலை காலமானார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ஆ. பொன்னம்பலம்
(மைத்துனர்)

81, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(63964)

## திருமதி பாக்கியலெட்சுமி சோமசுந்தரம்

வேலணையைச் சேர்ந்த பாக்கியலெட்சுமி சோமசுந்தரம் அவர்கள் 17-3-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம்-நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், நாகராசா, சாந்தலிங்கம், குமாரசாமி, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலாம்பாள், காலஞ்சென்ற ஆனந்தநடராசா, ஆனந்தசிவராசா, மணிமேகலை, ஆனந்ததவராசா [பிரதேச சபை, ஊர்காவற்றுறை], ஆனந்ததுணைராசா [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பாலசிங்கம், விஜயரெட்ணம், லோகராணி, சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [18 3-99] வியாழக்கிழமை பிற்பகல் 3 00 மணியளவில் அம்பலவி மணற்காட்டு மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

தகவல்:
S. தவராசா
[மகன்]

4 ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு
[63951]

## சூசைப்பிள்ளை அந்திரேஸ்பிள்ளை

சில்லாலை பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை அந்திரேஸ்பிள்ளை 17-03-99 நேற்று பிற்பகல் 5.00 மணிக்கு காலமானார்.

அன்னார் லூர்த்தம்மா அவர்களின் அன்புக் கணவரும் வென்சஸ்லஸ் டேவிற் [வன்னி], வெலிசித்தம் புனிதம், மேரி திரேசா(டெய்சி), டெனீசியா-புஸ்பம், அதோனிப்பிள்ளை (செல்வம்) மேரி இமெல்டா ஸ்ரனிஸ்லஸ், ஸ்ரனிஸ்லஸ் (யோகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பற்றீஷியா, சாமினிராணி, (ஆசிரியை, புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம்), சிங்கராஜா) தாழையடி திசவீரசிங்கம் (யாழ்ப்பாணம்), கிங்சிலி மரியதாஸ் (ஆஸ்திரேலியா), மெற்றில்டா (டென்மார்க்), அன்ரன் விஜயகுமார் (சுவிஸ்), மேரி வனஜா (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்வசுதர்சன், மேரிலூட்ஸ் சாந்தினி, ஜோசப் கிறேசியன், மேரி நிரோஷா, லிங்ரன் (ஆஸ்திரேலியா), ஜாக்குலின் (ஆஸ்திரேலியா), டென்மார்க்கிலுள்ள சுஜீவனி, சர்வினி, அன்ரன் வரோ ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (18-03-99) இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு (புதிய நேரம்) சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் பண்டத்தரிப்பு புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தங்கராஜா
(உறவினர்)

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு.
[சி/6822]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப்பட்ட விவகாரங்கள் பாடசாலை நிர்வாகத்தை குழப்ப இடமளியாதீர்!

## ஆசிரியர்களிடம் பணிப்பாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச் 18

தனிப்பட்ட பிரச்சினைகள் மற்றும் குடும்ப விவகாரங்கள், பகைமைகள் என்பன பாடசாலை நிர்வாகச் செயற்பாடுகளைப் பாதிப்பதற்கு ஆசிரியர்கள் இடமளிக்கக் கூடாது.

அதிபர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக ஆசிரியர்கள் பாடுபடவேண்டும்.

யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆசிரியர்கள் சம்பந்தமான பிரச்சினைகள் மற்றும் தனிப்பட்ட பகைமைகள் குறித்து பல அநாமதேயக் கடிதங்கள் அலுவலகத்துக்கு வந்து குவிந்த வண்ணம் உள்ளன.

ஆசிரியர்களின் இடமாற்றங்கள் மற்றும் ஏதேனும் விடயங்கள் தொடர்பாக அதிருப்தி இருக்குமிடத்து நேரடியாகவோ அல்லது விளக்கமான கடிதம் மூலமோ வலயக் கல்வித்திணைக்களத்தில் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம்.

அண்மையில் எமது வலயப் பகுதியில் உள்ள இரு பாடசாலைகளில் தனிப்பட்ட மற்றும் குடும்ப விவகாரங்கள் தொடர்பான பிரச்சினைகள் காரணமாக சில ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

இத்தகைய இடமாற்றங்கள் அனைத்தும் மாணவர்களின் கல்வி முன்னேற்றம் கருதியும், அவர்களின் கல்விச் செயற்பாடுகளைப் பாதிக்காத வகையிலுமே மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு கல்விப்பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

# சாரணர்களுக்கு ஜனாதிபதி விருது

யாழ்ப்பாணம், மார்ச் 18

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் இம்மாத ஆரம்பத்தில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடந்த சாரணர்களுக்கு ஜனாதிபதி விருது வழங்கும் வைபவத்தில் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய சாரணர் மாவட்டங்களைச் சேர்ந்த மூவருக்கு பதக்கங்களும்மேலும் மூவருக்கு தகைமைச் சான்றிதழ்களும் 8 பேருக்கு பாராட்டுச் சான்றிதழ்களும், 5 பேருக்கு ஜனாதிபதி சாரணர் விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான பதக்கங்கள மற்றும் விருதுகள் பாராட்டுச் சான்றிதழ்கள் ஆகியவற்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அன்றைய தினம் நேரடியாக வழங்கினார்.

வடபகுதி தலைமைக் காரியாலய ஆணையாளர் வீ. குணரத்தினம், வடபகுதி சாரணர் சங்க இணைப்பாளரும், பருத்தித்துறை மாவட்ட ஆணையாளருமான கோ. செல்வநாயகம் ஆகியோருக்கு தகைமைப் பதக்கங்களும்—

கிளிநொச்சி மாவட்ட ஆணையாளரும், யாழ்ப்பாண சாரணர் வலய உததியோகத்தருமான மா. புவனேந்திரனுக்கு சேவைப் பதக்கமும்—

திருமதி ஆர். ஜே. பி. சேவியர், டி. எம். வி. இராஜசிங்கம், என். சவுந்தரராஜன் ஆகியோருக்கு தகைமைப்பத்திரங்களும்—

த. கனகராசா, சு. ஏகாம்பரநாதன், சு. குமரஸ்வர ஆனந்தன், ஜி செபஸ்ரியாம்பிள்ளை, எஸ். தேவராஜன், ஆர். ஞானசீதியன, சி. பற்குணராசா, கே. தர்மேசன் ஆகியோருக்கு பாராட்டுச் சான்றிதழ்களும்—

ஜே. பெர்னான்டோ, இ.ஜே வசந்தநாத், பி விசுவநாத், எஸ். கேதீஸ்சன், பி. அஜித்குமார் ஆகியோருக்கு ஜனாதிபதி சாரணர் விருதுகளும்—

வழங்கப்பட்டுள்ளன.

## அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

நல்லூர் பிரதேச சபையினால் திருநெல்வேலியிலுள்ள சைவச் சிறுவர் இல்லத்துக்கு வேம்பு, மா போன்ற மரங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

பிரதேச சபையின் தலைவர் என். நிசாந்தன் மேற்படி மரங்களை வழங்கினார். (இ-5)

# யாழ். நகரில் இருந்து மண்டைதீவுக்கு பஸ்

யாழ்ப்பாணம். மார்ச் 18

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் யாழ் பஸ் நிலையத்திலிருந்து மண்டைதீவுக்கு நேற்று முன்தினம் முதல் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் புதிய பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 9 மணிக்கு மத்திய பஸ் நிலையத்திலிருந்து மண்டைதீவு நோக்கிப் புறப்படும் இந்த பஸ் அங்கிருந்து காலை 10 மணியளவில் மத்திய பஸ் நிலையத்தை வந்தடையும். பகல் 1.30 மணியளவில் மீண்டும் மத்திய பஸ் நிலையத்திலிருந்து மண்டைதீவு நோக்கிச் சென்று பஸ் அங்கிருந்து பிற்பகல் 2 30 மணிக்கு மத்திய பஸ் நிலையம் நோக்கிப் புறப்படும்.

தற்பொழுது பரீட்சார்த்தமாக இரு பஸ் சேவைகள் மண்டைதீவுக்கு நடத்தப்பட்டு வருகின்றன.

பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்ட இரு தினங்களிலும் 4 பிரயாணிகள் மட்டும் இந்த பஸ்ஸில் பயணம் செய்ததாகவும் —

பொதுமக்கள் இந்தச் சேவையைப் பயன்படுத்துவது குறைவாக இருந்தால் ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து இந்தச் சேவையை ரத்துச் செய்ய வேண்டிய நிலையேற்படலாம் என்றும் —

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் தெரிவித்தார். (ஐ-5-7-111)

## பல்கலைக்கழக விரிவுரைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட 1995 ஆம் ஆண்டு 18 ஆம் அணி மாணவர்களுக்கான கிளினிக்கல் விரிவுரைகள் அடுத்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகும் என பதிவாளர் கலாநிதி க. குணராசா அறிவித்துள்ளார்.

இதேவேளை —

விவசாய பீடத்தின் 1998 — 99 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் இம் மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-7)

## பரீட்சை நிலையங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 18

தேசிய கல்விநிறுவனத்தால் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் நடத்தப்படவுள்ள கல்வி டிப்ளோமா பகுதி I, பகுதி II ஆகியவற்றுக்கான தேர்வு யாழ்ப்பாணத்தில் இரு பரீட்சை நிலையங்களில் இடம்பெறும்.

யாழ்ப்பாணம், வடமராட்சி ஆகிய இடங்களிலேயே இந்த நிலையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

யாழ்ப்பாணப் பரீட்சை நிலையம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பரீட்சார்த்திகள் எந்த நிலையத்திலும் தோற்ற முடியும் என்று யாழ்ப்பாண வலயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

எனவே இப்பரீட்சையில் நூன சித்தி பெற்றோரும் இத்தடவை பரீட்சைக்குத் தோற்றமுடியும். (உ-ғ)

# பொருள் விநியோகிக்கும் அமைப்பாக மட்டும் கூ.சங்கங்கள் இருக்க கூடாது

## கண்காட்சி திறப்பு விழாவில் உரை

நல்லூர், மார்ச் 18

கூட்டுறவுச் சங்கங்கள் நுகர்வுப் பொருள்களை விநியோகிக்கும் ஒரு ஸ்தாபனம் என்ற நிலையில் இருந்து விடுபட்டு தொழில் வாய்ப்புக்களையும் பொருளாதார அபிவிருத்திக்கான செயற்பாடுகளையும் கொண்ட நிறுவனமாகத் தன்னை விரிவுபடுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் அமைப்பாக வளர வேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச்சபையின்மாவட்ட மகளிர் நடத்திய மனைப் பொருளியல் டிப்ளோமா பயிற்சி நெறியின் கைப்பணிப் பொருள் கண்காட்சியைத் திறந்துவைத்துப்பேசிய யாழ். மக்கள்வங்கி பிராந்திய முகாமையாளர் சி. இளம்பிறைநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர்குழுத் தலைவி திருமதி ரதிசோதிலிங்கம் தலைமையில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் இந்தக் கைப்பணிக் கண்காட்சியும் விற்பனையும் நடைபெற்றது.

பிராந்திய முகாமையாளர் இளம்பிறைநாதன் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

காலத்தின் தேவையைத் தெரிந்து கொண்டு அதற்கேற்றதான தொழிற்பயிற்சி நெறிகளைத் திட்டமிட்டு பயிற்சியாளர்களுக்கு வழங்க வேண்டும். பயிற்சியாளர்களும் தமது பொருளாதார நிலையை உயர்த்தும் வகையில் சிறந்த பயிற்சிகளைப் பெறுவதில் ஆர்வம் காட்ட வேண்டும். அதன் மூலம் தாமே சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிக்கக் கூடிய வேலைத்திட்டங்களைத் தயாரித்தல். செலவீடுகளை மதிப்பீடு செய்தல், முதலீடுகளைத் திட்டமிடுதல்போன்றவற்றிலும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களுடன் மக்கள் வங்கிக்கு நீண்டகால வலுவான தொடர்புகள் உண்டு. ஒரு தரமான கண்காட்சியைக் காண வாய்ப்பளித்த உங்களுக்கு எனது நன்றிகள் — என்று தெரிவித்தார்.

மகளிர் குழுத்தலைவி திருமதி ரதிசோதிலிங்கம் தமது தலைமையுரையில் பேசும் போது கூறியதாவது:-

கடந்த பல வருடங்களாக மகளிரின் முன்னேற்றத்திற்கான பயிற்சிகளைத் திட்டமிட்டு நிறைவேற்றும் நாம் படிப்படியாக வெற்றியடைகிறோம். எமது மகளிர் மத்தியில் இலைமறை காயாக இருக்கும் பலரின் ஆற்றல்கள் இப்பயிற்சியூடாகவும் கண்காட்சியின் மூலமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பெண்களின் திறமைகளையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்தும் ஒரு பகுதியாக இன்றைய கண்காட்சி அமைந்துள்ளது. எதிர்காலத்தில் மேலும் பலருக்குப் பயிற்சிகளை வழங்கி அவர்களின் சுபீட்சத்திற்கு உதவுவதே எமது குறிக்கோளாகும்— என்று தெரிவித்தார்.

யாழ். பிரதான வீதி மக்கள் வங்கி முகாமையாளர் க. பாலச்சந்திரன் பேசும்போது கூறியதாவது:-

இக் காட்சியில் தரமான உற்பத்திகளைக் காண முடிகிறது. கூட்டுறவு நிலையங்களின் இத்தகைய வளர்ச்சியும், முயற்சியும் பாராட்டப்பட வேண்டியது. கூட்டுறவுக் கல்வி அபிவிருத்திக்கு மக்கள் வங்கி தன்னாலியன்ற உதவிகளை வழங்கும் இங்கு பயிற்சி பெற்ற மகளிருக்கு சுய முயற்சிக்கான கடன் திட்டங்கள் வங்கியிடம் உள்ளன. பயிற்சியாளர்கள் அதன் மூலம் மேலும் பயனடைய முடியும்— என்றார்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி பேசும் போது கூறியதாவது:-

பிரதேச ரீதியாக நடத்தப்பட்ட அடிப்படைப் பயிற்சி நெறிகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள் இம்மாவட்ட மட்ட இரண்டாம் கட்டப் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர். இவர்கள் தாம் பெற்ற அறிவை ஏனைய மட்டங்களுக்கும் எடுத்துச் சென்று பொதுவான வளர்ச்சிக்கு உதவ வேண்டும்— என்றார்.

செல்வி செ. விஜயராணி, கூட்டுறவு உதவி ஆணையாளர் கு. சண்முகநாதன், சு. சிவசுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர்.

கண்காட்சியில் குழந்தைகளுக்கான உடையணி உட்பட சிறுமிகளுக்கான விழா ஆடைகள், பஞ்சாபி, ஆண்களுக்கான ஆடைகள், குஷன் சிற்றுக்கள், கண்ணாடி வர்ணங்கள் கொண்ட படங்கள், கேக் வகைகள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

பத்து மாதங்களாக பயிற்சி பெற்று வெளியேறும் 49 யுவதிகளின் கைவண்ணம் கண்காட்சியில் தெரிந்தது. [illegible] மக்கள் காட்சியைப் பார்வையிட்டுப் பாராட்டினார்கள். (ஐ-103)

## இராணுவத்தினரின் சில செயல்கள் குறித்து அனுருத்த அதிருப்தி!

கொழும்பு, மார்ச் 18

பாதுகாப்புப் படையினரின் சில நடவடிக்கைகள் அதிருப்தியையும், கவலையையும் தருவனவாக அமைந்துள்ளன என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்ஜெனரல்அனுருத்த ரத்வத்த நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அநுராதபுரம் இராணுவ முகாமில் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கவலை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

'லக்பிம' பத்திரிகை செய்தியாளர் கடத்தல் மற்றும் தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகிக்கும் இராணுவ அதிகாரி மீது விசாரணைகள் நடைபெறுகின்றன அந்த அதிகாரி ஏற்கனவே இராணுவத் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வருங்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறுவதை சகித்துக் கொண்டிருக்க முடியாது.

வடமாகாணத்தை விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து விடுவிக்க அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

அவர்கள் பிடியில் இருந்த 90 சத வீதமான பகுதி விடுக்கப்பட்டுள்ளது — இப்படி அவர் கூறினார். (உ-3-ந)

# 75 வீடுகள் அமைக்கும்பணி வலி. மேற்கில் ஆரம்பம்

மூளாய், மார்ச் 18

வலிகாமம் மேற்கில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் 75 வீடுகளை அமைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

மூளாய், பொன்னாலை, வட்டுக்கோட்டை, அராலி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில்மேற்படி உதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஆரம்ப நடவடிக்கையாக இப் பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பயிற்சி வகுப்புக்களும் அறிவுரைக் கூட்டங்களும் மேற்படிநிறுவன அதிகாரிகளால் நடத்தப்பட்டு வருகின்றன.

அடுத்த கட்டமாக வீடமைப்புக்குத் தேவையான பிரமாண அடிப்படையிலான கட்டடப் பொருள்களை ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் பயனாளிகளுக்கு வழங்கும்என்றும் தொடர்ந்து கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## மரத்தால் விழுந்து காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

கள்சீவுவதற்காக தென்னை மரத்தில் ஏறியவர், மரத்தில் இருந்து தவறி விழுந்து காயமடைந்தார்.

ஆனைக்கோட்டை, ஆறுகால் மடம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மருதக்குட்டி குணரட்ணம் (வயது 44) என்பவரே காயமடைந்தவராவார் இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

இராசையா திரவியநாதன் என்பவருடைய தேசிய, விஷேட அடையாள அட்டைகள் இரண்டும், (இல. 582853169V) மீசாலைக்கும், வரணிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து A R. இரத்தினம், வைரவர் கோயிலடி, பத்தமேனி, அச்சுவேலி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(63885)

பாலசிங்கம் பாலவதனி என்பவருடைய தேசிய, விசேட அடையாள அட்டைகளும் [இல. 767542488V] பிரிகேட் பாஸும் தும்பளை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கவிதா ரேடேர்ஸ், பருத்தித்துறை என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். [சி/6809]

செல்வி அருள்மரியானந்தம் அருளானந்தம் ஆகிய எனது விசேட அடையாள அட்டையும், ஒரு தொகைப்பணமும் பேர்சுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இளவாலை சன்னியர் மடம் மகாவித்தியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

[63943]

சண்முகம் பாலசுப்பிரமணியம் ஆகிய எனது தேசிய, விசேட அ. அட்டைகள் [490750983V—090701760I] தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அளவெட்டி தெற்கு, அளவெட்டி என்ற விலாசத்தில் ஒப்படைத்துதவவும்.

[63930]

### காணவில்லை

கடும் மண்ணிறமுடைய ஜேசி இன பசுமாடு (J M எனும் அடையாளமுடையது.) கடந்த 10 நாள்களாக காணவில்லை. இதுபற்றித் தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: J. மனோ, 12/2, 2 ஆம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். [63938]

### விற்பனைக்கு

பரிஸ்றீட் பெரிய ஹார்மோனியம், தம்புரா, பியானோ, ஈஸ்ரேன் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. T. கணேசன், 261/7, கண்டி றோட், யாழ்ப்பாணம்[யாழ். மாநகர சபை மகப்பேற்று நிலையம் அருகில்.] [63339]

### திருத்துதல்

சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல். புகைப்படத்துறை துணை சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, இல. 301, கஸ்தூரியார் வீதி, மேல்மாடி, (கன்னாதிட்டிச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம்

[63934]

## வெற்றிடம்

பத்திரிகைத்தாள் நேர்சீராக வெட்டக்கூடிய (Cutter) அனுபவம் மிக்க ஒருவர் தேவைப்படுகின்றார்: கணிசமான வேதனம் வழங்கப்படும் சான்றிதழ்களுடன் அலுவலக நேரத்தில் நேரில் சமுகம் தரவும்.

ஆளணி முகாமையாளர்
"உதயன்"

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## பயிலுநர்கள் (Trainees) வெற்றிடம்

பின்வரும் அச்சு இயந்திரங்களில் இயந்திர இயக்குநர் (பயிலுநர்) பதவிக்கு வெற்றிடங்கள் உள்ளன.

1. 'ஒவ் - செட்' அச்சு இயந்திரம்
2. 'ஹைடில் பேர்க்' சிலிண்டர்

பயிலுநர் காலத்தில் உரிய வேதனம் வழங்கப்படும். சான்றிதழ்களுடன் அலுவலக நேரத்தில் நேரில் சமுகம் தரவும்.

இரவு - பகல் பணிபுரியக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

ஆளணி முகாமையாளர்
"உதயன்"

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சாரணர் சங்கக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 18
சாரணர் தலைவர்கள் மற்றும் குருளைச் சாரணர் தலைவர்கள் ஆகியோருக்கான சாரணர் சங்கக் கூட்டம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9. 30 மணிக்கு நடைபெறும்.

1998 ஆம் ஆண்டு கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெற்ற கலைக்கூறு—2 பயிற்சியில் கலந்துகொண்ட சாரணர்களுக்கான சான்றிதழ்களும் அன்றைய கூட்டத்தில் வழங்கப்படும் என்று கிளிநொச்சி சாரணர் மாவட்ட ஆணையாளர் மா. புவனேந்திரன் அறிவித்துள்ளார்.

(ஐ-6)

## செயற்பாட்டைக் கண்காணிக்க யாழ். பாடசாலைகளுக்கு கல்வி அதிகாரிகள் குழு

யாழ்ப்பாணம், மார்ச் 18
யாழ்ப்பாண வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் குறித்து கண்காணிக்கவென கல்வி அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று பாடசாலைகளுக்கு திடீர் விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கற்றல், கற்பித்தல், செயற்பாடுகள் மற்றும் மாணவர்களின் உடல், உள செயற்பாடுகளுக்கு இந்த மேற்பார்வையில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —
யாழ் வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் இருந்து இடமாற்றம் கோரி விண்ணப்பித்த ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் விரைவில் பரிசீலிக்கப்படும் என யாழ் வலயக்கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன

(ஐ-7)

## சாவகச்சேரி இந்துவில் புதிய கட்டடங்கள் திறப்பு

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட—நூறு அடி நீளமான 5 வகுப்பறைகளைக் கொண்ட — கட்டடத்தின் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும், கல்லூரியின் அபிவிருத்திச் சபையும் இணைந்து இந்த வகுப்பறைக் கட்டடத்தொகுதியை அமைத்திருந்தன.

இதே வேளை —
மேற்படி கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட வெற்றிவேலு ஞாபகார்த்த கேட்போர் கூடமும் இன்றைய தினம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தக் கேட்போர் கூடம் மாநாடுகள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவதற்குப் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

### பயிற்சி

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் குருளைச்சாரணர்களுக்கான அறுவர் தலைவர் பயிற்சி எதிர்வரும் சனிக்கிழமை காலை 8,30 மணிமுதல் மாலை 4 30 மணிவரை சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியலயத்தில் நடைபெறும் என உதவி மாவட்ட ஆணையாளர் க. தர்மேசன் அறிவித்துள்ளார் (ஐ-152)

## பிற்போடப்பட்டுள்ளது

கரவை பிராமணந்தோட்ட ஞானவைரவர் ஆலய திருப்பணிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 18 - 04 - 99 கும்பாபிஷேக தினத்தன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

- ஆலய குருக்கள்

கரவை பிராமணந்தோட்ட ஆலயம்,
கரவெட்டி.

(63948)

## யாழ். மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
## வருடாந்த பொதுக் கூட்டம் 1999

நாள்: 28 - 03 - 1999 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: 10. 00 மணி [புதியநேரம்]
இடம்: யாழ். மத்திய கல்லூரி, தம்பர் மண்டபம்

### நிகழ்ச்சி நிரல்

இறைவணக்கம்
தலைவர் உரை
போஷகர் உரை
செயலாளர் - பொதுக்கூட்ட/ ஆண்டறிக்கை
பொருளாளர்- ஆண்டறிக்கை
பிரேரணைகள்
உத்தியோகத்தர் தெரிவு
பிறவிடயங்கள்— நன்றியுரை

[பொதுக் கூட்டத்துக்கு வரும் அங்கத்தவர்களை நுழைவாயிலில் அங்கத்துவத்தை உறுதிப்படுத்திய பின் அனுமதிக்கப்படுவர்.]

மதியபோசனம் 12. 30 மணி

மதிய போசனத்துக்கு அங்கத்தவர்கள் துணைவியரோடு சமுகங் கொடுக்கவும்.
[முன் கூட்டியே பதிவினை மேற்கொள்ளவும் – நபர் ஒருவர் 125/-, சிறுவர்களுக்கு 100/- ]

மென்பந்து துடுப்பாட்டம் 2.00 — 3.30 மணி

பழைய மாணவர் / ஆசிரியர்கள்- 20 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்.

அதிபர் தேநீர் மாலை 4. 00 மணி

தங்களைத் தவறாது சமுகங் கொடுத்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செ. திருநாவுக்கரசு,
உதவிச் செயலாளர்,
23, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

இ. இராசாராம், B Sc
தலைவர்,
6, தபாலக வீதி, சாவகச்சேரி.

(சி/6813)

பிள்ளையார் துணை

## விவாஹ சோபன சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ ஸர்வமங்கள வெகுதானிய வருஷம் பங்குனித் திங்கள் 5 ஆம் நாள் (19—03—1999) வெள்ளிக்கிழமை சுக்லபட்ச துதியை திதியும் ரேவதி நட்சத்திரமும் மிர்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் காலை 9 44 மணிமுதல் 10.43 மணிக்குள் வரும் இடபலக்கின சுப வேளையில்,

பிரம்மஸ்ரீ சுந்தரராஜ சர்மாவின்
பௌத்திரியும்
பிரம்மஸ்ரீ பசுபதீஸ்வர சர்மாவின்
ஜேஷ்ட புத்திரியுமாகிய
சௌபாக்கியவதி
**ராஜஸ்ரீயை**

பிரம்மஸ்ரீ தங்கசாமி ஐயரின்
கனிஷ்ட புத்திரனான
சிரஞ்சீவி
**சற்குணானந்தசர்மாவிற்கு**

கன்னிகாதான பாணிக்ரஹணம் செய்து கொடுப்பதாகவும், திருமாங்கல்யதாரணஞ் செய்வதாகவும் ஸ்ரீ கைலாசபிள்ளையார், கமலாம்பிகா சமேத கைலாசநாதசுவாமி நல்லைக்கந்தன, சிவபூரணி காளியம்மன், ஊரெழுவிநாயகப்பெருமான் துணையுடன் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தம் நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் நடக்கவிருப்பதால் தாங்கள் இஷ்டமித்ர குடும்ப சமேதராக வந்திருந்து ஷிசுபமுகூர்த்தத்தை நடத்தி வைத்துத் தம்பதிகளை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபமஸ்து

பிரம்மஸ்ரீ பசுபதீஸ்வர சர்மா [ராஜன்]
சகுந்தலா தம்பதிகள்
பிரம்மஸ்ரீ ஸ்ரீனிவாஸ சர்மா [மணி]
சாந்தினி தம்பதிகள்
179 நல்லூர் கோயில் முன்பாக
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

ஸ்ரீமதி. சாரதாம்பாள் தங்கசாமி ஐயர்
குடும்பத்தினர்
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

சமாவர்த்தனம் காலை 6-30 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.
வரவேற்பு: மணமகன் இல்லத்தில் 20—03—1999 சனிக்கிழமை நடைபெறும்.
தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும். (63947)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தாக்குதலுக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 18
'லக்பிம' பத்திரிகையின் செய்தியாளர் சிறிலால் பிரியந்த மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்த வேண்டும் என்று வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் கோரியுள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்தை அச் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இனிமேல் தொடராமல் இருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அச்சங்கம் கோரியுள்ளது.

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்

### நடராசா சிவராசா (அங்கிள்)

(முன்னாள் வலி. கிழக்கு பிரதேச சபை உபதலைவர்)

மலர்வு 28 – 10 – 1937 உதிர்வு 02 – 02 – 1999

அமரர் நடராசா சிவராசா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் இரங்கல்உரைநிகழ்த்தியவர்களுக்கும், மலர்வளயங்கள் சாத்தியவர்களுக்கும் வேறுவழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் பிரதேச சபைகளின் உறுப்பினர்களுக்கும், E. P. D. P. நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று நடைபெறும் வீட்டுக் கிருத்திய கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்

பூதர்மடம்.
கோப்பாய் வடக்கு, கோப்பாய். (63921)

---

## வாழ்த்துகின்றோம்

செ. மெற்றாஸ் மயிலின்

### வேழம்படுத்த வீராங்கனை

எனும் நாட்டுக்கூத்து

கூத்து என்று சொல்லாத வகையில், சரித்திரப் படம் பார்ப்பது போன்ற உணர்வினை ஏற்படுத்தியது!

யானை தோன்றும் காட்சி, நடனக் காட்சி உட்பட அதில் நடித்த கலைஞர்கள் யாவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள், இவர்கள் இன்னும் பல ஆயிரம் மேடைகள் ஏறி மக்கள் மனதில் இடம் பிடிக்க வேண்டுமென இதய பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

### வீடியோ கலாமினி,

(63902) அச்சுவேலி.

---

## கொடுப்பனவு

சண்டிலிப்பாய், மார்ச் 18
சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் மேலும் 219 பேருக்கு மீளக்குடியமர்வுக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியாது இந்தப் பிரிவில் வசித்து வரும் குடும்பங்களுக்கே இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் நா- வேதநாயகன் தெரிவித்தார்.

[135]

## சங்கக்கிளையில் கடன் திட்டம்

திருநெல்வேலி, மார்ச் 18
நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் தனது உறுப்பினர்களுக்கும் மற்றும் சங்க பிரதேசத்திலுள்ள பாவனையாளர்களுக்கும் நுகர்ச்சிக் கடன் திட்டத்தின் கீழ் பொருள்களை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளது.

ஒரு தொகைப் பணத்தை சேமிப்பில் இடுபவர்களுக்கு பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

கொக்குவில் மேற்கு கிளை [இலக்கம் 12) இல் இந்தத் திட்டத்தை சங்கத் தலைவரும், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவருமான பெ. கனகசபாபதி இந்த வாரம் ஆரம்பித்து வைத்தார்.

(இ-135)

## கலை விழா

சண்டிலிப்பாய், மார்ச் 18
வலிகாமம் மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை சங்கானையிலுள்ள கலாசார மண்டபத்தில் அடுத்தமாதம் 8 ஆம் திகதி தொடக்கம் நான்கு தினங்களுக்குக் கலை, கலாசார நிகழ்ச்சிகளை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இந்தக் கலை விழாவில் நாட்டுக்கூத்து, கிராமிய நடனம், சங்கீதம், இன்னிசை நாடகம் ஆகிய பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என்று வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராஜா தெரிவித்தார்.

(இ-135)

---

உ

ஸ்ரீராம ஜெயம்

## விவாக சோபன சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் பங்குனி மாதம் 4ஆம் நாள் (18 - 03 - 1999) வியாழக்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரமும் பிரதமைத் திதியும் இடபலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுப தினத்தில் காலை 9-00 மணி முதல் 10-30 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில்

பிரம்மஸ்ரீ ந. பிரகதீஸ்வர சர்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் சிரஞ்சீவி

**சாயிஜீவானந்த சர்மாவுக்கு**

(ஸ்ரீலங்கா ரெலிகொம்)

பிரம்மஸ்ரீ ம ஜெயராமசர்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி சௌபாக்கியவதி

**ஜானகியை**

(ஸ்ரீலங்கா ரெலிகொம்)

நல்லையம்பதி சிவன் தேவஸ்தான மண்டபத்தில் கன்னிகாதானம், திருமாங்கல்யதாரணம் பாணிக்கிரஹணம் செய்ய இறைவன் திருவருளை முன்னிட்டுப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளது. இவ்வைபவத்துக்குத் தாங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

சமாவர்த்தனம்: மணமகன் இல்லத்தில் காலை 7-50 மணிக்குள் நடைபெறும்.
வரவேற்பு (வதுவரகிரஹ பிரவேசம்) மணமகன் இல்லத்தில் மாலை 3-30 மணிக்கு நடைபெறும்.

(இருவீட்டார் அழைப்பு)

சுபமங்களம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

பிரம்மஸ்ரீ ந. பிரகதீஸ்வரசர்மா,
திருமதி கலாவதி பிரகதீஸ்வரசர்மா,
(ஆசிரிய ஆலோசகர் யாழ். கல்வி வலயம்)
84, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

பிரம்மஸ்ரீ ம. ஜெயராமசர்மா
(உதவிக் கல்விப்பணிப்பாளர் தீவகம்)
திருமதி சாந்தி ஜெயராமசர்மா
136, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

வரவேற்பாளர்கள்

பிரம்மஸ்ரீ சிவ. சிவகுமாரசர்மா தம்பதிகள்,
பிரம்மஸ்ரீ இ. கமலநாதசர்மா தம்பதிகள்,
சிவஸ்ரீ ந. யோகானந்தக்குருக்கள் தம்பதிகள்,
பிரம்மஸ்ரீ க. கேசவசர்மா தம்பதிகள்,
பிரம்மஸ்ரீ சோ. கேதீஸ்வரசர்மா தம்பதிகள்.

(63929)

---

மல்லாகம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க

## புனரமைப்பு கூட்டம்

சங்க புனரமைப்பு கூட்டம் 21–03–1999 பி. ப 2.00 மணிக்கு பாடசாலையில் நடைபெற இருப்பதால் பழைய மாணவர்கள் சந்தாப் பணத்தைச் செலுத்துவதுடன் தவறாது கூட்டத்திற்கும் சமுகமளிக்கவும்.

- அதிபர்

(63935)

---

## முதலாம் ஆண்டு நினைவுத்துளிர்



அன்னையின் மடியில் 01 – 04 – 1979

மண்ணின் மடியில் 28 – 03 – 1998

### செல்வன் சி. நிசாந்தன்

திதி: பிரதமை 18 – 03 – 1999 வியாழக்கிழமை

அரும்பாகத் துளிர்த்த நீ
மொட்டவிழ்ந்து மலராவாய் எனவும்
காயாகிக் கனியாவாய் எனவும்
கனவில் நினைத்தோம் நாம்
அனைவரிலும் அன்பு கொண்ட
அரும்பே — நிசாந்தன் குட்டி
மலர முன்பே சருகி எம்மை
மல்க வைத்தாய் கண்ணில் நீரை......
உருக வைத்தாய் மண்ணில் நெஞ்சை.

உம்பிரிவால் மனம் வெதும்பும்:
அம்மா, அப்பா, அப்பப்பா,
அக்கா, அண்ணா, தம்பி,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

கு. சிவனேசன்,
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (63906)

---

## 2-ம் ஆண்டு வற்றாத கண்ணீர் வெள்ளம்

தோற்றம் 19 – 02 – 1980 மறைவு 18 – 03 – 1997

செல்வன்

### அகளங்கன் சகாதேவன்

(யாழ்ப்பாணக் கல்லூரி, ஸகந்தவரோதயாக் கல்லூரி மாணவன்)

நினைக்கும் போதே செல்லமே
நெஞ்சை வாட்டி வதைக்குதடா
பார்க்கும் போதே உனது உருவை
மயக்கம் ஏற்படுகுதடா
ஈராண்டுகள் கழியுதடா ஆனால்
இருவிழிகளிலும் இரத்தக் கண்ணீர்
கழியவில்லையடா!
கண்ட கனவுகள் எல்லாம்
நனவாகிப் போனதடா செல்லமே
காலன் உந்தன் மூச்சை மட்டும்
ஏனோ கொண்டு சென்று விட்டதடா
பேச்சு மட்டும் இங்கு தவழ்கின்றதடா
அம்மா, அப்பா என்ற முதல் வார்த்தை
சொன்னாய் செல்லமே!
இன்று ஆறுதல் சொல்ல யாரும் இல்லை
செல்லமே!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

காலமெல்லாம் கலங்கும்
அப்பா — ஆ.சகாதேவன்,
அம்மா — ச. ஈஸ்வரி.
தம்பிமார் — ச. பிங்கலன்,
ச. ஜணாங்கணன்.

''பெற்றோர் மாளிகை'',
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய். (63932)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

புங்குடுதீவு பெருங்காடு


## சிவன் கோயில் இராஜ கோபுர கும்பாபிஷேகம்

இராஜ கோபுரம் வர்ண வேலைகள் செய்யப்பட்டு பங்குனி மாதம் 5 ஆம் திகதி (19 - 03 - 99) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெறும். அன்று அன்னதானமும் வழங்கப்படும்.

22—03—99 திங்கட்கிழமை பகல் 11மணிக்கு கொடியேற்று விழாவோடு மகோற்சவம் ஆரம்பமாகும்.

ஸ்ரீ நாகேந்திரக் குருக்கள்
பெருங்காடு சிவன் கோயில், புங்குடுதீவு
(63895)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 19 | 14 |
| — | — |
| 08 | 02 |
| — | — |
| 1953 | 1999 |

அமரர்

### சின்னத்துரை மனோகரன்

ஒரு நொடியில் பிரிந்த தப்பா உமது உயிர்
தனியனாய்த் தவிக்கின்றோம் தங்கள் முகம்
காணாமல்
ஆடி அடங்கிடும் வாழ்க்கை என்று
அமைதி கொண்டீரோ எம்மை விட்டு.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, பிள்ளைகள்.

50/ 21, செட்டித்தெரு,
நல்லூர்.
(சி/6799)

## கும்பாபிஷேகம்

வலிகாமம் தெற்கு, மார்ச் 18

சுன்னாகம வரியப்புலம் வைரவர் தேவஸ்தான நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.15 மணிக்கு நடைபெற உள்ளது.

வைரவர், விநாயகர், முருகன், நாகதம்பிரான் முதலிய சுவாமிகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் நேற்று புதன்கிழமை ஆரம்பமாகின. இன்று வியாழக்கிழமை காலை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தி வழிபடுவர்.

(ஐ-1'52)

## கூட்டம்

வலி. வடக்கு, மார்ச் 18

மல்லாகம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க புனரமைப்புக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-86)

## மாநாட்டு மண்டபத் திறப்புவிழா

சண்டிலிப்பாய், மார்ச் 18

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சுமார் ஐந்து இலட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாநாட்டு மண்டபம் நாளை வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தத் திறப்புவிழாவில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

(இ-135)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

### வேலைகளுக்கான ஒப்பந்தகாரரைப் பதிவு செய்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கேள்வி நடைமுறைகள் மூலம வேலைகள் செய்ய விரும்பும் ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக ரூபா 100 உம் மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 10, 000 உம் செலுத்துவதின் பேரிலும், பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் மூலமும் இச்சபையின் வேலை ஒப்பந்தகாரராக பதிவு செய்து கொள்ளலாம்.

(1) ரூபா 5,00, 000 க்கான சொத்துக்களின் சான்றிதழ்.

(2) வியாபாரப் பதிவுச் சான்றிதழ்.

(3) ICTAD பதிவுச் சான்றிதழ்.

(4) பொருள்கள், சேவைகள் வரிப் பதிவுச் சான்றிதழ்.

(5) தொழில் நுட்ப தகுதிச் சான்றிதழ்
(வீதி அபிவிருத்தி அதிகாரசபை/வீதி அபிவிருத்தித் திணைக்களம்/மாநகர, நகர, பிரதேச சபைகள்/கட்டடம்/நிர்மாணத் திணைக்களம்)

(6) தொழில் நுட்பம், வாகனங்கள், உபகாரணங்களின் ஆளணி முதலியவற்றின் சான்றிதழ்.

வரும் காலங்களில் எம்முடன் பதிவு செய்து கொண்ட ஒப்பந்தகாரர் தவிர வேறு எந்த நபருக்கோ அன்றி தாபனங்களுக்கோ கேள்விப் படிவம் விநியோகிக்கப்படமாட்டாது.

பதிவுகள் யாவும் 1999 – 03 – 22 ஆம் திகதி பகல் 1.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தி. மா. செல்வராசா ஜே. பி, யு. எம்.
தலைவர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்,
1999—03—16.
(சி/6802)

# 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

காலத்தின் கோலம் தானோ
கலக்கத்தின் சோகம் ஏனோ
கண்ணீர் தான் வற்றினாலும்
கருத்தினில் அழியாது தந்தையே!
உண்ணின்று எம்மைக் காத்து
உயர்வெல்லாம் தந்த எம்
எண்ணத்தில் என்றும் நீயே
பண்பினால் உலகின் தீபம்
வேல் கொண்ட முருகன் பாதம்
வேண்டி நீ சென்றாயோ?

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 | 04 |
| — | — |
| 07 | 03 |
| — | — |
| 1921 | 1999 |



### சிவஸ்ரீ கதிரித்தம்பிஐயர் அரியரத்தினஐயர்

செல்வச்சந்நிதி தொண்டமானாறை வசிப்பிடமாகக் கொண்டவரும், செல்வச்சந்நிதி கோயிலின் உரிமையாளர்களில் ஒருவருமாகிய சிவஸ்ரீ கதிரித்தம்பிஐயர், அரியரத்தினஐயர் 1999 ஆம் ஆண்டு மாசி 20 ஆம் திகதி (04 - 03 - 99) அன்று சிவபதம் அடைந்துவிட்டார். இந்நிகழ்வில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் இன்னும் உதவி செய்தவர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரியரத்தினஐயர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (19 - 03 - 99) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். மேலும் வீட்டிலும், சந்நிதியான் ஆச்சிரமத்திலும் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு சகலரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச்சந்நிதி, தொண்டமானாறு.

அரியரத்தினஐயர் குடும்பத்தினர்.

(63843)

# உதயன்

## நியாயமான கோரிக்கை

யாழ்ப்பாணக்குடாநாட்டின் பிரதானதொழில்களில் கடற்றொழிலும் ஒன்று கடல் வளம் நிறைந்த பிரதேசம் இது. அந்த வளம் உரிய முறையில் பயன்படுத்தப்பட்டால், நவீன தொழில் நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டால், இப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களிக்கக் கூடியது

ஆனால் துரதிர்ஷ்ட வசமாக தமிழர்கள் தமது உரிமைப் போராட்டத்தைத் தொடங்கிய கால கட்டத்திலேயே பெரிய அளவில் பாதிக்கப்பட்ட தொழிலாக கடற்றொழில் மாறிவிட்டது.

யாழ்ப்பாணத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையில் போராளிகள் கடல் வழியாகவே பயணம் செய்கிறார்கள்; ஆயுதங்களைக் கொண்டு வருகிறார்கள்; என்று கூறி அரசாங்கம் கடலில் கண்காணிப்பு நடவடிக்கைகளைமேற்கொண்டது

கண்காணிப்பு என்ற பெயரில் அவ்வப்போது குடாநாட்டைச் சூழவுள்ள பல கடற்பிரதேசங்களிலும் தொழில் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. கடல் வலயத் தடைச் சட்டத்தைக் விசேடமாகக் கொண்டு வந்து குடாநாட்டுக் கடற்றொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கப்பட்டது

தொழில் செய்வதற்காக கடலில் இறங்குவோர் படையினரின் தாக்குதலுக்கும், துன்புறுத்தலுக்கும் ஆளாக நேர்ந்தது. படையினர் தாக்கியதில் பலர் உயிரிழந்ததும் உண்டு.

1996 ஏப்ரல் மாதத்தில் குடாநாட்டில் மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர் கடற்றொழில் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள ஒரு தொழிலாகி விட்டது. "பாதுகாப்புக் காரணம்" என்ற முத்திரையுடன் அந்தத் தொழில் மிகப் பெரிய அளவில் முடங்கச் செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட கடற்பகுதிகளில் தொழில் செய்ய முடியாது என்று திடீர் திடீரெனத் தடையும். தடங்கலும் போடப்படுகிறது.

அதன் விளைவாக குடாநாட்டில் கடற்றொழில் நிச்சயமற்ற, நிரந்தரமற்ற தொழிலாக மாறிப் பரிதாப நிலையை அடைந்துள்ளது. ஆகையால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் அவர்களது வாழ்க்கையை நடத்துவதற்கு மாதாந்த நிதி உதவி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மிகவும் நியாயமானதாகும்.

ஒரு தொழிலைத் தேர்ந்தெடுக்கவும் அதனைச் செய்யவும் ஒருவனுக்கு உள்ள உரிமை அவனது அடிப்படை மனித உரிமையாகும். அதனைத் தடுக்கும் அல்லது பாதிப்புறச் செய்பவர் யாராக இருந்தாலும் நஷ்டஈடு வழங்கியே ஆக வேண்டும்.

அந்த நஷ்ட ஈட்டை மாதாந்த உதவிப்பணமாக வழங்கி கடற்றொழிலாளரின் பட்டினியைப் போக்க வேண்டும். இதனை அரசாங்கம் செய்யும் சலுகையாகக் கொள்ளக் கூடாது; மனித உரிமைகளைப் பேணுவதற்கு அரசு ஆற்றும் கடமையாகவே அமையும்.

# கோப்பாய் ஆஸ்பத்திரி புனரமைக்கப்பட்டும்

# "டிஸ்பென்சரி" போன்றே இயங்குகிறது!

குடாநாட்டில் தற்போது நோய்த் தாக்கங்களின் விகிதம் அதிகரித்துள்ளதையும் எவரும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதனால் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பளுவும் அதிகரித்துள்ளது இந்த பளு அதிகரிப்பைக் குறைக்க வேண்டுமெனில் பிரதேச

## முழு அளவில் இயங்கத் தடங்கல் என்ன?

மட்டத்தில் இயங்கிவரும் சிறிய சுற்றியல் வைத்திய சாலைகளின் சேவை விருத்தி செய்யப்பட வேண்டும் என்ற கருத்து தற்போது வைத்திய வட்டாரங்களில் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

ஆனால் கோப்பாய் வைத்தியசாலையைப் பொறுத்த வரையில் இந்தக் கருத்து செவிடன் காதில் ஊதிய சங்கு போலாகிவிட்டதை

**செய்தி மடல்**

அங்கு நேரில் சென்று பார்த்தபோது உணரக் கூடியதாக இருந்தது.

45 வருட காலம் பழைமை வாய்ந்த இந்த ஆஸ்பத்திரி மீளக்குடியமர்வின் பின் இப்போது ஒரு சிறிய மருந்தகம் போன்றே செயற்பட்டு வருகின்றது இதை மீண்டும் முழு அளவில் செயற்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவும் விழலுக்கு இறைத்த நீராகி விடுமோ என்று மக்கள் அஞ்சுகின்றனர்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு முப்பத்தொரு கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய மிகப் பெரிய பிரதேசம். கல்வியங்காடு முதல் உரும்பிராய், அச்சுவேலி, ஈறாக இப் பிரதேசத்தில் 58,161 மக்கள் (இப்போது) வசிக்கின்றனர். இத்தனை எண்ணிக்கையான மக்களின் சுக நலனைப் பேணுவதற்குச் சேவையாற்றும் பொறுப்பு அச்சுவேலி, கோப்பாய் ஆஸ்பத்திரிக்கே உண்டு.

அச்சுவேலி ஆஸ்பத்திரி சிறப்பாக இல்லாவிடினும் ஏதோ தன்னாலியன்ற சேவையை வழங்குகின்றது. ஆனால் கோப்பாய் ஆஸ்பத்திரியின் கதையோ வேறு எங்கிறார்கள் இப்பகுதி மக்கள்.

### இன்னும் மருந்தகம் போல...

'சூரியப்பிரகாசம்' நடவடிக்கையின் போது சேதமடைந்த கோப்பாய் ஆஸ்பத்திரி புனரமைக்கப்பட்டுள்ளது. 'வார்ட்டு' கள் அடங்கிய சகல கட்டட வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டு ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படும். அது இன்னமும் ஒரு 'டிஸ்பென்சரி' மருந்தகம் போல—மருந்துகளை மட்டும் வழங்கும் ஒரு நிலையமாக செயற்பட்டு வருவதையிட்டு இப்பகுதி மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

இந்த மருந்தகம் கூட மதியம் இரண்டு மணிவரையே இயங்குகிறது. அதற்குப் பின்னர் எவருக்கும் நோய்வராது என்ற ஊகம் போலும்!

இந்த ஆஸ்பத்திரியில் தற்போது ஓர் உதவி வைத்தியர் (பெண்) மற்றும் ஒரு பற்சிகிச்சை மருத்துவர் (பெண்) ஆகிய இருவரே வைத்திய சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

40 படுக்கைகள் வசதி கொண்ட இந்த ஆஸ்பத்திரிக்கு தற்போது போதுமான அளவு பிறதரத்திலான ஊழியர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் மொத்த எண்ணிக்கை 21.

மகப்பேறு, ஆண், பெண், குழந்தைகள் வார்டுகள் என சகல சிகிச்சை இடங்களும் புனரமைக்கப்பட்டுத் தற்போது காட்சிக்கு வைக்கப்பட்டவை போன்று காணப்படுகின்றன.

எனினும் ஆஸ்பத்திரிக்கான அடிப்படை வசதிகள் இன்னமும் செய்து கொடுக்கப்படவில்லை என்று சில தரப்பினர் குறை தெரிவித்தனர் வைத்திய பகரணங்களுக்கு பற்றாக்குறை, மின்சாரம் இல்லை, அம்புலன்ஸ் வண்டி இல்லை. மருத்துவிச்சி தாதி இல்லை என்றெல்லாம் பட்டியல் நீள்கிறது

கிடைக்கும் வசதிகளைக் கொண்டு ஆஸ்பத்திரியை மெல்ல மெல்ல இயங்கச் செய்வார்களானால் பல தொண்டர் நிறுவனங்கள் உதவிக்கரம் நீட்டக் கூடிய வாய்ப்பு ஏற்படும். செயற்படாது அசமந்தமாக இருந்து கொண்டு, வசதி வரும் வரை செயற்பட முடியாது என

**பொ. இராஜேஸ்வரன்**
**வலி.கிழக்குச்செய்தியாளர்**

வாளா இருப்பது எந்தப் பலனையும் தரப் போவதில்லை என்பது எவருக்கும் புரியும்.

### டாக்டர் இல்லை

முன்னர் இங்கு எம்.பி.பி.எஸ்தர டாக்டர் ஒருவரும் மூன்று உதவி வைத்தியர்களும் சேவையாற்றிய இடத்தில் இப்போது ஓர் உதவி வைத்தியரே உள்ளமை பெரும் குறைதான்.

சிகிச்சை வசதியும் இல்லை அம்புலன்ஸ் வசதியும் இல்லை என்ற நிலையில் இப்பகுதி மக்களின் துயர் துடைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க மாட்டார்களா? என்று அவர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

கோப்பாய் ஆஸ்பத்திரி முழு அளவில் இயங்கினால் இரவு நேரம் அவதியுறும் நோயாளர்களை அங்கு அனுமதித்துச் சிகிச்சை பெற முடியும். ஊரடங்கு காரணமாக யாழ். ஆஸ்பத்திரிக்கும் நோயாளரைக் கொண்டு செல்ல முடிவதில்லை.

நேரில் சந்தித்த பலரும் இரவு நேர அவல நிலை குறித்தே பிரஸ்தாபித்தனர்.

கோப்பாய் ஆஸ்பத்திரியின் இந்த மந்த செயற்பாட்டிற்கு யார் காரணம் என்பது புரியாது அவர்கள் விழிக்கின்றனர்.

மிகப் பெரிய கட்டடத் தொகுதியாகக் கண்ணுக்குத் தெரியும் இந்த ஆஸ்பத்திரி இன்று ஒரு மூலையில் மருந்தகம் போன்று சேவை ஆற்றும் போது. அதுவும்இன்றைய சூழலில் அம்மக்களின் கஷ்டங்களையும் அதிகாரிகளின் போக்குக்குறித்த உணர்வுளையும் புரிந்து கொள்ள முடியும்.

அந்த வகையிலாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புரிந்து கொண்டு மக்களுக்கு—நோயாளருக்கு உதவுவதற்கு—நடவடிக்கை எடுக்க ஆவன செய்வார்களா?

இவ் வைத்தியசாலை புனரமைக்கப்பட்டும் இதனை முழு அளவில் இயங்க வைக்கத் தடைகளும், இழுபறி நிலைகளுமே உள்ளன. என மருத்துவமனை நலன் புரிச்சங்க உறுப்பினர் சிலர் கவலை தெரிவித்தனர்.

திகதிகளும் மாதங்களுமாக தவணை சொல்லப்படுகிறதே தவிர காரியம் ஆகவில்லை என்றும் —

தடங்கல் எங்கே, ஏன் என்பதனைத்தங்களாலும் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும் — நலன்புரிச் சங்கப்பிரமுகர்கள் மேலும் விசனம் தெரிவித்தனர்.

## சாயி சிந்தனை

நீ எப்போதும் இறைவனை மறக்கலாகாது. இவ்வுலகியலில் தாய் கூட சில சமயம் குழந்தையை மறக்கலாம். தெய்வம் மறக்காது. அனைவரையும் விட நெருங்கியவர் இறைவன். அந்த இறைவனை அமைதியின் ஆழத்தில் காணலாம். உலகியலான ஆசைகள் குறையக் குறைய அமைதி உன்னுள் உருவாகிறது. Less Luggage. More Comfort Make Travel A Pleasure ஆகவே ஆசைகளைப் படிப் படியாகக் குறைத்துக் கொள்ளுங்கள். ஆனால் கடமைகளை மட்டும் விடாமல் செய்து வாருங்கள்.

[ஆதாரம்:
சனாதன சாரதி]


## யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### வரம் அருளும் வைத்தீஸ்வரன்!

வண்ணைதனில் உறைகின்ற வைத்தீஸ்வரனே
வேண்டும் வரம் அளிக்கின்ற பரம்பொருளே - உமை
பெண்ணவளைப் பாகம் வைத்த பெருமானே - இந்தப்
பாரிலெங்கள் வினை தீர்க்கும் அரும்பொருளே
கண்ணதனைக் காக்கின்ற இமையது போல்
காத்துநிதம் அருளுகின்ற பெரும் பொருளே
மண்ணதனைச் சுமந்துவிளை யாடல்செய்த
முழுமுதலே! முதற்பொருளே! போற்றி போற்றி!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்


## ஆசிரிய ஆலோசகர் பதவிகள் வெற்றிடம்

வலிகாமம் தெற்கு, மார்ச் 18

வலிகாமம் கல்வி வலயத்தில் பல பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

ஆசிரிய சேவையின் உயர் வகுப்பில் உள்ளவர்கள், பொருத்தமான உயர் கல்வித் தகைமையுடையவர்கள், தொழில் தகைமையுடையவர்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

சங்கீதம், சித்திரம், நடனம், வர்த்தகமும் கணக்கியலும். ஆங்கிலம், தமிழ், உடற்கல்வியும் சுகாதாரமும் ஆகிய பாடங்களுக்கே ஆசிரிய ஆலோசகர்கள் பதவி வெற்றிடமாக உள்ளது

விண்ணப்பிக்க விரும்புவோர் வலயக் கல்வி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பாக அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஐ-152)

## நாளை

**பங்குனி 5**

**வெள்ளிக்கிழமை**

திதி: துதியை
முன்னிரவு 9.02 வரை.
நட்சத்திரம்: ரேவதி
முன்னிரவு 11.02 வரை.
சுபநேரம்: 6.19 7.49
ராகுகாலம்: 10 49 12.19
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி

## தவக்காலச் சிந்தனை-30

உலகியல் வாழ்க்கையிலே மனிதன் தன்னைப்பற்றித் தானே சான்று பகர விளைகின்றான். தனதுபெருமையை மற்றவர் அறிய வேண்டுமென்று அவாக் கொள்கின்றான். அதற்காக தனது திறமைகள், ஆற்றல்களுக்கு மேலாகத் தன்னை உயர்த்தி, பெரிய மனிதர்கள் பட்டியலில் இடம் கிடைக்க வழி தேடுகின்றான் மற்றவர் கண்களுக்கு இவரின் திறமைகள் தெரிவதில்லை. செயற்பாடுகளும் தெரிவதில்லை. இருந்த போதும் தானே திறமையாளன் எனச் சொல்வதில் பெருமைப்பட்டுக் கொள்கின்றான்.

இயேசு சொல்கின்றார்: "என்னைப்பற்றி சான்று பகர வேறு ஒருவர் இருக்கின்றார்" என்னைப்பற்றி அவர் சொல்லும் சான்றுசெல்லும். (யோ. 5:31). இப்படி எமது நற்செயலுக்காக மற்றவர்கள் சான்றுபகரக் கூடிய விதத்தில் எமது வாழ்வு அமைய வேண்டும். வீண் பெருமைகள் எம் வாழ்வை வளமாக்கமாட்டாது. நாம் குருட்டு வழிகாட்டிகளாக இருந்து எதிர்காலச் சமூகத்திற்கு துரோகம் செய்தவர்களாவோம். எனவே எமது நற்செயல்கள் எமக்குச் சான்றாக அமையட்டும்.

— அன்ரனி பீற்றர்

### உதய வாக்கு

ஆயிரம் முறை சிந்தனை செய்யுங்கள்; ஆனால் ஒருமுறைமுடிவு எடுங்கள்.

— துருக்கியப் பழமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கர் கொம்ப்ளெக்ஸ்

- கறுப்பு, வெள்ளை தையல் இயந்திரங்கள் மற்றும் உதிரிப் பாகங்களை எம்மிடம் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- சகல விதமான தையல் இயந்திரங்களும் உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.

19, கே. கே. எஸ்· வீதி,
சுன்னாகம்.

[63945]

## கிணற்றில் வீழ்ந்து காயம்

கிணற்றடியில் நின்ற வேளை வலிப்பு ஏற்பட்ட சிறுவன் கிணற்றினுள் வீழ்ந்து காயமடைந்தார்.

கைதடி நுணாவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பூபாலசிங்கம் யாசேர் (வயது 10) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக் ப்பட்டுள்ளார்.

## அரச சிற்றூழியருக்கான எழுதுநர் தேர்வுப் பரீட்சை

நவாலி, மார்ச் 18

அரச திணைக்களங்களில் சிற்றூழியர்களாகப் பணிபுரிபவர்களை அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க பொது எழுதுநர் சேவை மற்றும் தட்டெழுத்தாளர் சேவையின் இரண்டு 'ஆ' பிரிவுக்கு தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான பரீட்சை எதிர்வரும் மே மாதம் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் சகல மாவட்டங்களிலும் நடத்தப்படும்.

விண்ணப்பங்களை இம்மாதம் 26 ஆம் திகதிக்கு முன்பாக பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான முழு விவரங்களும் 19-2-99 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(ஐ-100)

## குழந்தைகளுக்கு ஜீவாகாரம்

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கற்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஜீவாகாரம் ஒவ்வொரு திங்கட்கிழமையும் கோண்டாவில் மத்திய மருந்தகத்தில் வழங்கப்படும்.

மாதத்தின் முதலாம், 3 ஆம் புதன்கிழமைகளில் கொக்குவில் மத்திய மருந்தகத்திலும் மாதத்தின் 2ஆம், 4 ஆம் புதன்கிழமைகளில் கொக்குவில் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் இவை வழங்கப்படும்.

(ஐ-ரீ)

## முறைசாராக் கல்விப் பிரிவு - 1999

முறைசாராக் கல்விப் பிரிவின் ஊடாகப் பாடசாலையைவிட்டு விலகிய மாணவர்களுக்கான தொழிற்றிறன் பயிற்சி நெறிகளும், விருப்புக்குழுவினர்க்கான பாடநெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. பயிற்சி நெறியைப் பயிலவிரும்பும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைப் பயிற்சி நெறி நடைபெறும் பாடசாலை அதிபருக்கு 1999–03–25 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

| பாடசாலை | பயிற்சிநெறி |
|---|---|
| 01. யா/ சென். சாள்ஸ் ம. வி. | உடையமைத்தல், தலையலங்காரம் |
| 02. யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி | 1. சுருக்கெழுத்து, தட்டெழுத்து (தமிழ்)<br>2. குளிரூட்டலும் காற்றுச் சீராக்கலும்<br>3 வானொலி பழுதுபார்த்தல் |
| 03. யா/ கன்னியர்மடம் ம வி. | விடுதித் தொழில் |
| 04. யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம் | கணனி |
| 05. யா/ சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை | வீட்டு மின் இணைப்பு |
| 06. யா/ இந்து மகளிர் கல்லூரி | தலை அலங்காரமும், சமையற்கலையும் |
| 07. யா/ நல்லூர் சி. சீ. த. க. பா. | 1. கைப்பணிப் பொருள் உற்பத்தி<br>2. தட்டச்சு இயந்திரம் பழுது பார்த்தல்<br>3. வீட்டு மின் இணைப்பு |
| 08. யா/ இளையதம்பி இந்து வித்தி. | உடையமைத்தலும், தலை அலங்காரமும் |
| 09. யா/ முத்துத்தம்பி ம. வி. | 1. உடையமைத்தல்<br>2. தோட்டப்பயிர்ச் செய்கை |
| 10. யா/ பெரியபுலம் ம. வி. | சித்திரக்கலை |
| 11. யா/ கொக்குவில் இ. க. | 1. சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (தமிழ்)<br>2. நூலகர் சேவை |
| 12. யா/ கோண்டாவில் இ ம. வி. | 1. மோட்டார் வாகனம் பழுது பார்த்தல்<br>2. உடையமைத்தல் (ஆண்கள்) |
| 13. யா/ கனகரட்ணம் ம. ம. வி. | 1. சுருக்கெழுத்து, தட்டெழுத்து (ஆங்கிலம்)<br>2. மோட்டார் வாகனம் பழுது பார்த்தல் |
| 14. யா/ அச்சுவேலி சென் திரேசா ம க. | 1. விடுதித்தொழில்<br>2. சுருக்கெழுத்து, தட்டெழுத்து (தமிழ்) |
| 15. ய / புத்தூர் சோமஸ்கந்தா வி. | 1. கணனி<br>2. சுருக்கெழுத்து தட்டெழுத்து (தமிழ்)<br>3. வீட்டு மின் இணைப்பு |
| 16. யா/ ஆவரங்கால் சைவமகாஜனா வித். | உடையமைத்தல் |
| 17. யா/ அச்சுவேலி ம. வி. | வீட்டு மின் இணைப்பு |
| 18. யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தி. | தோட்டப்பயிர்ச் செய்கை |
| 19. யா/ புத்தகலட்டி விஷ்ணு வித்தி. | உடையமைத்தல் |
| 20. யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | 1. சுருக்கெழுத்து தட்டெழுத்து (ஆங்கிலம்)<br>2. வானொலி பேணல்<br>3. நூலகர் சேவை |
| 21. யா/ உரும்பிராய் இ. கல்லூரி | 1. வீட்டு மின் இணைப்பு<br>2. மோட்டார் வா. பழுது பார்த்தல்<br>3. உடையமைத்தல் |
| 22. யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி. | உடையமைத்தல் |
| 23. யா/ இடைக்காடு ம. வி. | சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்), மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல் |

### விருப்புக்குழு பயிற்சி நெறிகள்

| பாடசாலை | |
|---|---|
| யா/ மத்திய கல்லூரி<br>யா/ இந்து மகளிர் கல்லூரி | ஆங்கிலம்<br>பொது உளச்சார்பும்<br>பொது அறிவும்<br>கணனி |
| யா/ கனகரட்ணம் ம. ம. வி.<br>யா/ செங்குந்த இந்துக்கல்லூரி<br>யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி<br>யா/ புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி<br>யா/ அச்சுவேலி சென். திரேசா ம. க, | |

**கல்வித்தகைமைகள்:**

1. சுருக்கெழுத்து, தட்டெழுத்தும் (தமிழ்), நூலகர் சேவை, விடுதித் தொழில், பொது அறிவும் பொது உளச்சார்பும் தமிழ்ப் பாடத்தில் திறமைச்சித்தி (சீ) உட்பட க. பொ. த (சா. த) ஆறு பாடங்களில் சித்தி.
2. சுருக்கெழுத்து தட்டெழுத்து (ஆங்கிலம்), கணனி. ஆங்கில மொழி: ஆங்கில பாடத்தில் திறமைச்சித்தி (சீ) உட்பட க. பொ. த (சா. த) ஆறு பாடங்களில் சித்தி.
3. ஏனைய பயிற்சி நெறிகள்: ஆண்டு 9 சித்தி. மேலதிக விவரங்கள் தேவைப்படின் பாடசாலை அதிபருடன் அல்லது வலயம் — 01 முறைசாராக் கல்விப்பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

**கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாண வலயம்.**

(சி/6303)

## ஏல விற்பனை

**உழவு இயந்திரம் - 37 ஸ்ரீ 1686 ஐ. எம். ரி**

இச்சபைக்குச் சொந்தமான மேற்படி உழவு இயந்திரம் 01-04 1999 ஆம் திகதி காலை 11-00 மணிக்கு சபை அலுவலக முன்பாக ஏலத்தில் விற்பனை செய்யப்படும். கொள்வனவு செய்ய விரும்புவோர் அன்றைய தினம் காலை 10-00 மணிக்கு முன்பாக அலுவலகத்தில் ரூபா 1,000 மீளளிக்கப்படக் கூடிய வைப்புப் பணமாகச் செலுத்தி பெயரைப் பதிவு செய்து ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

சு. சந்திரசேகரம்
தலைவருக்காக
நகராட்சிமன்றம்,
வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை,
15-03-1999.

(சி/6812)



யாழ். வண்ணை கன்னாதிட்டி

அருள்மிகு

## காளியம்பாள் தேவஸ்தானம்

## பாலஸ்தாபனகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

அன்புடையீர்,

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் வெகுதானிய வருடம் பங்குனி மாதம் 5 ஆம் திகதி (19 - 03 - 99) வெள்ளிக்கிழமை காலை 8.21 மணி முதல் 9.21 வரையுள்ள மேஷலக்ன சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீ காளியம்பாளுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடி இருப்பதால் அடியார்கள் அன்றும், அதற்கு முதல் நாளும் நடைபெறும் கிரியைகளைத் தரிசித்து அம்பிகையின் திருவருளால் எல்லாச் செல்வங்களும் பெற்று அம்பிகையின் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் தேவியின் திருவருட் துணை கொண்டு விரைவில் நிறைவேற அம்பிகையைப் பிரார்த்திப்போமாக.

### கிரியா நிகழ்ச்சிகள்

18 - 03 - 99 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கிரியாரம்பம்.
விநாயகர் வழிபாடு, சாந்திகள், யாகாரம்பம்.
மாலை 6 மணி 13 நிமிடத்திற்குமேல் பிம்பங்கள் பாலஸ்தாபன பிரவேசம்

19 - 03 - 99 வெள்ளிக்கிழமை காலை 6. 00 மணிக்கு நியாசம, ஸ்பர்சாகுதி.
காலை 8 21-க்குமேல் 9. 21-க்குள் பாலஸ்தாபன கும்பாபிஷேகம், தர்சனம், தீபாராதனை.

சர்வபோதகர்:
பிரம்மஸ்ரீ தா. மகாதேவாக் குருக்கள் (சமாதான நீதிவான்)

பிரதிஸ்டா பிரதம குரு:
சிவஸ்ரீ. சி. ஜோதீந்திரக் குருக்கள்

ஆலய பிரதம குரு:
பிரம்மஸ்ரீ ந. தாமோதரஐயர் ஆகியோரின் தலைமையில் கிரியைகள் நடைபெறும்.

நன்றி!

**தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள்.**

விளம்பர அன்பளிப்பு:
**தே. கரன்**
வேலணை மேற்கு, வேலணை. (63936)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 18

கொககுவில்இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழன் பிற்பகல் 1. 30 மணியளவில் கல்லூரி அதிபர் பொ. கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை பிரதம விருந்தினராகவும்— யாழ். நல்லூர் கல்விக்கோட்டங்களின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ-7-ரி)

★ ★ ★

வரணி மகாவித்தியாலயம் இல்லவிளையாட்டுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ந. நவரத்தினராசா தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

தென்மராட்சி வலயபிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. கணேசன் முதன்மை விருந்தினராகவும், பாடசாலையின் முன்னாள் அதிபர் சி. துரைராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (க-133)

★ ★ ★

புங்குடுதீவு மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு அதிபர் க. தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக வேலணை உதவி அரசாங்க அதிபர் செ. இரத்தினமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக ரேசிரியர் வி சிவசாமியும் தீவக கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் நா. தர்மலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

★ ★ ★

யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலய மெய்வல்லுநர் போட்டிஇன்று பிற்பகல் 1.30 மணிக்கு கொட்டடி கலைவாணி விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருமதி செ. பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளைபிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (இ-51)

★ ★ ★

அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ் கலவன் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வீ. ஓங்காரலிங்கம் தலைமையில் நடைபெறும்


இந்த நிகழ்வில் தீவககல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ. தில்லைநாதன் பிரதம விருந்தினராகவும் தீவக வலக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்வரெத்தினம், உதவிக் கல்விப் பணிப்பாளர் வ. நிமலநாதன் தீவக வலயஉதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற் கல்வி) எம். எஸ். ஏ. ஒஸ்வேல்ட் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (இ-6)

| | |
|---|---|
| வா | எங்களுள் ஒருவனாய் இருந்து |
| | இன்று...... |
| ழ் | யாழ். பல்கலையின் |
| த் | அகவையில் மிக இளவலாய்...... |
| து | உதவிப் பதிவாளராக |
| கி | உயர்ந்து நிற்கும் |
| ன் | எங்கள் அன்பு நண்பன் |
| றோ | கந்தசாமி ஞானபாஸ்கரன் B. A. |
| ம் | அவர்களை பெருமையுடன் வாழ்த்துகின்றோம், |

யாழ். பல்கலைக்கழக
முன்னாள் அமைய எழுதுவினைஞர்களான
நண்பர்கள்

[63960]

# 8 ஆம் வருட நினைவஞ்சலி



அமரர்

**சிவபுரநாதர் சிவராசா**

(சிவன்)

(பாதுகாப்பு ஊழியர், இலங்கை மின்சார சபை, சுன்னாகம்)

| அன்னை மடியில்: | ஆண்டவன் பிடியில்: |
|---|---|
| 04–08–1966 | 17–03–1991 |

திதி: 18 — 03 — 1999

எட்டாண்டு முடிந்ததையா
எமைவிட்டு நீ பிரிந்து
கிட்டாதா உன் தரிசனம் - மீண்டும்
கிடைக்காதா உன் அன்பு?

இலங்கை மின்சாரசபை ஊழியர்களுக்கு நன்றி
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உம் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
அக்கா, மருமகன்.

சங்கரத்தை, வட்டுக்கோட்டை. (சி/6818)

# சமய சந்நிதியில்

கச்சேரி நல்லூர்வீதியிலுள்ள நல்லூர் பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அடுத்த மாதம் முதலாம் திகதி காலை தேர்த்திருவிழாவும் இரண்டாம் திகதி காலை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். 5 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 12-00 மணியளவில் அன்னதானம் இடம்பெறும். (ஜ)

★ ★ ★

தெல்லிப்பழை தரை மண்கலட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.25 மணி முதல் 10.25 மணி வரை நடைபெறவுள்ளது

கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகும். இன்று அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துவர்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பன்னிரண்டு நாள்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். (க)

★ ★ ★

சமரபாகு சல்லியவத்தை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய சங்காபிஷேகம் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறும்.

சங்காபிஷேகத்தை முன்னிட்டு இரவு கலை நிகழ்ச்சிகளும், சமய நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (இ-15)

★ ★ ★

அல்வாய் வடக்கு வியாபாரிமூலை அருள்மிகு பத்திரகாளி சமேத ஸ்ரீ ஆதி சிவவீரபத்திர சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும் உற்சவ நிகழ்வுகளில் 30 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 31 ஆம் திகதி சமுத்திர தீர்த்தோற்சவமும் நடைபெறும். (இ-15)

# கருத்தரங்கு

சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் நடத்தும் பொருளியல் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல்2-30மணிக்கு மருதனார்மடம்இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் எஸ். வரதராஜன் கருத்துரை வழங்குவார். (இ—க)

★ ★ ★

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறும் திறனாய்வியல் கருத்தரங்குத்தொடரின் மூன்றாவது அமர்வு நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு பலாலி ஆசிரியகலாசாலையில் நடைபெறவுள்ளது.

மார்க்ஸீய அழகியல் என்ற தலைப்பில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கு யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர்கலாநிதி சி சிவலிங்கராஜா தலைமை வகிப்பார். பேராசிரியர் நா. சுப்பிரமணியன்தொடருரைநிகழ்த்துவார் (இ—27)

# ஐ. நா. அதிகாரி யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாண நிலைரங்களை நேரில் கண்டறிவதற்காக ஐ. நா. வின் மூத்த ஆலோசகரான மைக்கல் பிறிஸ்ரி என்பவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நாளை வரை தங்கியிருக்கும் இவர் இன்று மாலை 3-30 மணிக்கு யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளார். (இ—5)

# ஜனாதிபதி ஆணைக்குழு உறுப்பினரை இன்று மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு உறுப்பினர்களை யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றிய பிரதிநிதிகள் இன்று சந்திக்கவுள்ளனர்.

இன்று காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறும் இந்தச் சந்திப்பில் யாழ் மாவட்டத்திலுள்ள 16 மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த ஜனாதிபதி ஆணைக்குழு மூன்று நாள்கள் யாழ். செயலகத்தில் அமர்வுகளை நடத்திய பின்னர் நேற்று ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் விசாரணைகளை நடத்தியது.

தொடர்ந்து 24 ஆம் திகதி வரை இந்த விசாரணைகள் நடைபெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# முதலாம் தவணை விடுமுறை 2 ஆம் திகதி

கொழும்பு, மார்ச் 18

மாகாண சபைகளுக்கான தேர்தலையொட்டி பாடசாலைகளின் முதலாம் தவணை விடுமுறை ஏப்ரல் 2 ஆம்திகதி ஆரம்பமாகும் என கல்வி, உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மீண்டும் ஏப்ரல் 26 ஆம் திகதி இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் திறக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் தவணை விடுமுறைக்காக அடுத்த மாதம் 9 ஆம் திகதி பாடசாலைகள் மூடப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3-6-க)

# பரிசளிப்பு இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ் இந்துக்கல்லூரி கணித, விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான, கணித வினாவிடைப் போட்டிப் பரிசளிப்பு வைபவம் இன்று காலை 8 45 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

விஞ்ஞானபீடாதிபதி பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (-3 இ)

உ

## திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருடம் பங்குனித் திங்கள் 5 ஆம் நாள் [ 19-03-99 ] வெள்ளிக்கிழமை காலை 8-32 மணி முதல் 11 01 மணி வரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில்

## ரவி வீடியோ சென்ரர்
## RAVI VIDEO CENTRE

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்கவிருப்பதால் அத்தருணம் தாங்களும் கலந்து கொண்டு வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

உரிமையாளர்: நாகராஜா ரவிந்திரன்

இல. 73, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(63962)

உ
முருகன் துணை

## மங்களகரமான திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் பங்குனித் திங்கள் ஐந்தாம் நாள் ( 19 – 03 – 99 ) வெள்ளிக்கிழமை காலை 6-17 முதல் 7-49 வரை வரும் சுப முகூர்த்த நல்வேளையில்

இல. 130, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணத்தில்
( சத்திரத்துச் சந்திக்கு அருகில் )

## 'ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறிஸ்'

என்னும் ஸ்தாபனம் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது
வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- நிர்வாகி

(63963)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் காணி சுவீகரிப்பு முயற்சி

# தமிழரை முற்றாக அழிக்கும் திட்டம்

## இந்துசமயப் பேரவை ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

வலி–வடக்குப்பிரதேசசெயலர் பிரிவில் குறிப்பிட்ட பிரதேசங்களை சட்டரீதியாக சுவீகரிக்க அரசு எடுத்துள்ள முயற்சி நடைபெறும் யுத்தத்தை நீண்ட நாள்களுக்கு இழுத்தடித்து இலங்கைத் தமிழ் மக்களை முற்றாக அழிப்பதற்குத் திட்டமிடுவதாக நாம் கருதுகிறோம்.

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அவசர செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இந்த அநீதியான செயலை அரசு உடனடியாகக்கைவிட்டு இந்துக்கள் தங்கள் பிரதேசங்களில் சென்று குடியேறி வாழ அனுமதி வழங்கப்படவேண்டும் என்றும் அச்செய்தியில் கோரப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

வலி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பெரும் பிரதேசத்தைச் சுவீகரித்து இராணுவத்திடம் ஒப்படைக்க தாங்கள் தீர்மானித்திருப்பது குறித்துஎமதுபேரவைஆழ்ந்த கவலையையும் இந்துக்கள்சார்பில் வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றது.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையைப் பேச்சு வார்த்தை மூலம் தீர்ப்பேன் என மக்கள் ஆணை பெற்று வந்த தங்கள் அரசுஇலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்குப் பதிலாக தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாப்பு என்ற போர்வையில் ஆக்கிரமிக்கத் திட்டமிடுகிறதென்பது வெளிப்படை.

வலி.வடக்குப் பிரதேசத்தில் இந்துக்களின் வரலாற்று பெருமை மிக்க திருத்தலங்களான மாவிட்டபுரம்கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரம், கீரிமலைப் புனித தீர்த்தம் போன்றவை அமைந்திருப்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டியது ஆகும்.

அரசு போரைச் சாட்டாக வைத்து எமது கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்த பாரம்பரிய பிரதேசத்தை ஆக்கிரமிப்புச் செய்யச் சதித்திட்டம் வகுத்துள்ளது. இந்த நடவடிக்கையை உடனடியாக கைவிட வேண்டும் என்று இந்துக்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட பின்னர் தங்களின் அழைப்பின் பேரில் தமது சொந்த வீடுகளில் குடியமர்வதற்கு அவாவுடன் வந்த வலி. வடக்கு மக்களை இது வரை அவர்களது சொந்த வீடுகளில் குடியமர அனுமதி மறுத்துள்ளமை. அவர்களின் வாழ்விட உரிமையை மீறிய செயல் என்பதைத் தங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இம்மக்கள்சொல்லொணாத் துயரங்களின் மத்தியில் அகதி முகாம்களிலும் இரவல் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் உடனடியாகத் தத்தமது இடங்களுக்குச் சென்று மீள குடியமர அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் — என்றுள்ளது. (இ-3-173)

### தள்ளாடி...

(முதலாம் பக்கத் தொடர்)

லறிகள் ஏவப்பட்டு வரலாம் எனக் கருதப்படுகிறது.

ஆயுதங்கிடங்கு மீது அல்லது எரிபொருள் நிலையம் மீது ஷெல் வீழ்ந்ததால் புகைமண்டலம் ஏற்பட்டிருக்கலாம் என்று மற்றொரு தகவல் தெரிவித்தது.

மன்னார் நகரில் இருந்து இரு மைல் தூரத்தில் அமைந்துள்ள இந்த முகாமைத் தாக்கத் திருக்கேதீஸ்வரம் ஆலயப் பக்கத்தால் புலிகள் வந்திருக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

மன்னார் நகருக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டு நகரம் இருளில் மூழ்கியுள்ளது.

அதே நேரம்— இந்த முகாமில் காயமடைந்த படையினரை ஏற்றிக் கொண்டு மூன்று வாகனங்கள் மன்னார் ஆஸ்பத்திரிக்கு நேற்றிரவு வந்துள்ளதாகவும் கூறப்பட்டது.

நேற்று மாலை 6 மணிக்கு ஆரம்பமான புலிகளின் ஆட்லறித் தாக்குதல் நேற்றுப் பின்னிரவு வரை தொடர்ந்ததாகவும்—

நள்ளிரவு புலிகள் முகாமுக்குள் நுழையக்கூடும் என்றும்— பிந்திய தகவல்கள் தெரிவித்தன. (இ-3-6)

### கல்கிசை...

(முதலாம் பக்கத் தொடர்)

தனர்.

அவர் தங்கியிருந்ததாகக் கருதப்படும் வீட்டைச் சோதனை செய்த சமயம் அங்கிருந்து 50 ஆயிரம் ரூபா பணம், ஒரு கைத்துப்பாக்கி, துப்பாக்கிக் ரிய சன்னங்கள், ஏழு சயனைட் வில்லைகள் மற்றும் முக்கிய ஆவணங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றியதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

குண்டுத் தாக்குதல் நடந்த பகுதியில் இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் பரிசோதனைகளை நேற்று மேற்கொண்டனர் (இ-3-6-க)

### மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று வெடித்தது என்று தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக நிர்வாகம் இது விடயத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாணவர் தரப்பில் வலுவான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது [உ-3-7-15-139-6]

### திட்டமிட்டபடி...

(முதலாம் பக்கத் தொடர்)

ஏற்பாடாகியுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

கப்பலில் பயணம் செய்ய ரிக்கெட் பெற்றவர்களை நாளை காலை 9. மணிக்கு பயண ஏற்பாடுகளுடன் யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறும் அவர் கேட்டுள்ளார்.

அடுத்த கப்பலுக்கான ரிக்கெட் விநியோகம் எதிர்வரும் இங்கட்கிழமை முதல் மேற்கொள்ள ஏற்பாடாகியுள்ளது என்றும் —

அது தொடர்பான விவரம் ஓரிரு தினங்களில் வெளியிடப்படும் என்றும் — அவர் தெரிவித்தார் (இ-3-139)

### படகு...

(முதலாம் பக்கத் தொடர்)

★ சாமித்தம்பி சிவராசா [வயது 44 —பெரியபோரதீவு, மட்டக்களப்பு]

★ சின்னமணி யோகராஜா [வயது 28 —கரடிக்குண்டு, விநாயகபுரம், முழங்காவில்]

★ சங்கரப்பிள்ளை ஜெயசங்கர் [வயது 34 —கனகராயன்குளம் கிளிநொச்சி]

★ நாகலிங்கம் திருச்செல்வம் [வயது 28 —புதுக்குடியிருப்பு]

★ நடராசா தங்கராசா [வயது 44 —சுண்டிக்குளம், பரந்தன்]

★ செல்லத்துரை நாகேந்திரம் [வயது 42—புதுக்குடியிருப்பு]

★ பரராஜசிங்கம் ரகுராஜ் [வயது 30 —வட்டக்கச்சி கிளிநொச்சி]

★ ரகு சரவணமுத்து [வயது 51—புதுக்குடியிருப்பு]

★ முருகேசு பாலரட்ணம் [வயது 55—புதுக்குடியிருப்பு]

★ பொன்னையா இளங்கோ [வயது55— மதுரை]—படகோட்டி

★ ராமச்சந்திரன் சிவகுமார் [வயது 25 —இராமநாதபுரம்]

(இ-3-5-173)

### பரந்தனில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தது.

கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த புலிகளின் பலமான ஏழு பங்கர்களை அழித்து விட்டதாகவும் —

இந்த மோதலில் 4 புலிகள் உயிரிழந்தனர் என்றும்—

படைத் தரப்பில் நால்வர் காயமடைந்தனர் என்றும்— படைத்தரப்பு தெரிவித்தது. (இ-3-6)

### பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தக் குண்டுவெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டுவெடிப்பினால் பாதுகாப்பு அரண் சேதமடைந்ததுடன் இராணுவச் சிப்பாய்கள் இருவர் சிறு காயங்களுக்குள்ளாகினர் என்று தெரிவிக்கப்படுகிறது

குண்டுவெடித்த சிலநிமிட நேரங்கள் மேற்குறிப்பிட்ட பகுதி ஒரே புகைமண்டலமாகக் காட்சியளித்தது. குண்டுவெடிப்புச்சத்தத்தினைத் தொடர்ந்து பெரும் பதற்றம் நிலவிய போதும் சிறிது நேரத்தில் குறிப்பிட்ட பகுதி வழமைக்குத் திரும்பியது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச, தனியார் நிறுவனங்களின் ஊழியர்கள் பலர் இந்தக் குண்டுவெடிப்பு நடந்த சில நிமிடங்கள் முன்னதாக குறிப்பிட்ட வீதியைக் கடந்து சென்றுள்ளதால் மயிரிழையில் உயிர் தப்பினர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-5-15-139-173)

### களனி ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்)

பொலீஸாரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

களனி ரயில் நிலையத்தில் இருந்து ரயில் புறப்பட்ட சில நிமிட நேரத்தில் இந்தக் குண்டு கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

இது தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம் — கொழும்பு உயர் நீதிமன்றத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக பரவிய வதந்தியால் நீதிமன்ற அமர்வுகள் நேற்று இடைநிறுத்தப்பட்டன. (இ-3-6-க)

### நூற்றுக்கணக்கானோர்...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவித்தனர்.

கல்கிசையைச் சூழவுள்ள பகுதியில் மேற்கொண்ட தேடுதலில் 15 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை, மத்திய வீதி, வத்தளை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களில் 68 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். (இ-3-6-க)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18- 03 -1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

INSTITUTE OF INFORMATICS STUDIES
IIS Jaffna, Sri Lanka

புலமைப்பரிசில்-99
போட்டிப் பரீட்சை

எமது நிறுவனத்தினால் இவ்வாண்டு 1000மாணவர்களிற்கு வழங்கப்படவுள்ள கணனிக் கல்விக்கான புலமைப்பரிசிலுக்குரிய போட்டிப் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம். இப்பரீட்சையில் பரீட்சார்த்திகளின் நுண்ணறிவு, பொது அறிவு என்பன பரீட்சிக்கப்படும்.

புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் 25 ஆம் திகதி முதல் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

DIRECTOR,
IIS.
(சி/6307)

DCS JAFFNA
College of Computer Technology
Competitive Entrance Examination 1999/ 2000

Admission cards for the above examination which will be held on 21st Sunday March 1999 from 10 a.m to 12 p.m at

1) J/ Jaffna Central College, Jaffna,
2) J/ Hindu Ladies College, Jaffna,
3) J/ Vembady Girls College, Jaffna

have been posted to all candidates. Candidates should sit the examination at the center assigned to them.

Applicants who have not received the admission cards should contact the DCS Jaffna office immediately, bringing the receipts issued to them. If they are unable to do so, they will be allowed to sit the examination at one of the above three centers convenient to them if they produce the receipts issued by the Jaffna office.

All candidates should have their signatures on the Admission cards certified by a J P or Government Servant.

Director (Ad),
DCS,
124/2, Palaly Road,
Jaffna

DCS,
P.O Box 144,
Jaffna
(63950)

ஸ்ருடியோ பாவனைப் பொருள்கள்
விற்பனைக்கு உண்டு

B.S.P. 4 P/C
B.N. 4 P/C
B.N. 8 P/C
B.S.P. 8 W L P/C
B.S.P 8 W.L 12x10
B.S.P. 4 12x10
BLACK & WHITE FILM
COLOUR FILM

போட்டோஸ்ரற் பாவனைப் பொருட்கள் கனொன், சாப், கஸ்னர் ரொஷியா, கொனிக்கா, பனசோனிக் ஆகியவற்றிற்கான ரோனர், உதிரிப்பாகங்களும் உண்டு.

மற்றும் லமினற்றிங் மெசின் அதற்குரிய லமினற்றிங்பிலிம் என்பன விற்பனைக்கு உண்டு.

செல்வம் ஸ்ரோர்ஸ்
330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(63961)

எமது வீடியோ CD
[பிரமிட்]
வெளியீடுகள்!

⊙ உன்னைத்தேடி
⊙ தெய்வ வாக்கு
⊙ முத்துக் காளை
⊙ சிவகாமியின் செல்வன்
⊙ தங்கப்பதக்கம்
⊙ கௌரவம்
⊙ நல்ல நேரம்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/6821)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org